இயல்
இரண்டு

# ஈடில்லா இயற்கை



## கற்றல் நோக்கங்கள்

- பாடலை ஓசை நயத்துடன் படித்துச் சுவைத்தல்
- நாட்டுப்புறப் பாடல்கள் வழி மக்களின் உணர்வுகளை அறிதல்
- பழங்குடியினர் இயற்கையைப் போற்றும் உணர்வை அறிந்து பின்பற்றுதல்
- மொழிபெயர்ப்புப் படைப்புகளின் மூலம் நல் உணர்வுகளை உணர்ந்து மதித்தல்
- வினைமுற்றுச் சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்




8th Std Tamil _23-03-2019.indd 23 08-04-2019 3.26.21 PM

கவிதைப்பேழை

இயல் இரண்டு

# ஓடை

SANEVK




மனிதர் வாழ்வு இயற்கையோடு இயைந்தது. கவின்மிகு காலைப்பொழுதும், மயக்கும் மாலைப்பொழுதும், பிறை நிலவும், ஓடும் ஓடையும், பாயும் ஆறும், கத்தும் கடலும் நம் மனத்தை மயக்க வல்லவை. அவ்வாறு மனத்திற்கு இன்பமூட்டும் கவிதை ஒன்றைக் கற்போம் வாருங்கள்!


*ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட ...)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போராரோடி!
(ஓடை ஆட ...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட ...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளுழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்*
(ஓடை ஆட ...)

– வாணிதாசன்





8th Std Tamil _23-03-2019.indd 24
08-04-2019 3.26.22 PM

### சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தூண்டுதல் | – | ஆர்வம் கொள்ளுதல் | பயிலுதல் | – | படித்தல் |
| ஈரம் | – | இரக்கம் | நாணம் | – | வெட்கம் |
| முழவு | – | இசைக்கருவி | செஞ்சொல் | – | திருந்திய சொல் |

நன்செய் – நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்

புன்செய் – குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்

வள்ளைப்பாட்டு – நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்

### பாடலின் பொருள்

நீரோடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் செல்லும் ஓடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! சலசல என்று ஒலி எழுப்பியபடி ஓடுவதற்கு இந்த ஓடை எந்தப் பள்ளியில் படித்ததோ? நூல்களால் வருணித்துச் சொல்ல முடியாத இதன் அழகுக்கு இணையாக யாரால் எழுத முடியும்?

நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது. குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது. நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது. சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது.

### நூல் வெளி



தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன். அரங்கசாமி என்ற எத்திராசலு என்பது இவரின் இயற்பெயர் ஆகும். இவர் பாரதிதாசனின் மாணவர். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர். கவிஞரேறு, பாவலர்மணி முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர். இவருக்குப் பிரெஞ்சு அரசு செவாலியர் விருது வழங்கியுள்ளது. தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பன இவரது நூல்களுள் சிலவாகும்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஓடை என்னும் பாடல் இவரது தொடுவானம் என்னும் நூலில் உள்ளது.

## கற்பவை கற்றபின்

மலை, அருவி, ஓடை, மரங்கள், வயல்கள் ஆகியன இடம்பெறுமாறு ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்குச் சென்று கல்வி __________ சிறப்பு.

அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________.

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

3. 'நன்செய்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) நன் + செய் ஆ) நன்று + செய்

இ) நன்மை + செய் ஈ) நல் + செய்

4. 'நீளுழைப்பு' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு

இ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு

5. சீருக்கு + ஏற்ப – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப

இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

6. ஓடை + ஆட – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

அ) ஓடைஆட ஆ) ஓடையாட

இ) ஓடையோட ஈ) ஓடைவாட

குறுவினா

1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?

சிறுவினா

ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

சிந்தனை வினா

வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?



8th Std Tamil _23-03-2019.indd 26 08-04-2019 3.26.22 PM

கவிதைப்பேழை

**இயல் இரண்டு**

# கோணக்காத்துப் பாட்டு

KWU5HB

**நுழையும்முன்**

இயற்கை மிகவும் அழகானது; அமைதியானது; மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவது. ஆனால் அது சீற்றம் கொண்டு பொங்கி எழுந்தால் பெரும் அழிவை ஏற்படுத்திவிடும். தமிழ்நாடு அடிக்கடி புயலால் தாக்கப்படும் பகுதியாகும். முன்பு ஒருமுறை தமிழ்நாடு புயலால் தாக்குண்டபோது நாட்டுப்புறப் பாடல் வடிவில் பாடப்பட்ட பாடல்களை அறிவோம்.

*உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து*
*உளன்று உளன்றுமெத்த அடித்ததினால்*
*பெரிதான வீடுகளெல்லாம் – கோப்புடனே*
*பிரிந்தும் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே*

*சிங்காரமாய் வாங்கல்நகரில் – வைத்திருந்த*
*தென்னம்பிள்ளை அத்தனையும் வின்னமாச்சுதே*
*மங்காத காங்கயநாட்டில் – மேட்டுக்காட்டில்*
*மாளாத பருத்திஎல்லாம் கோலாகப்போச்சுதே*

*ஆரங்கள்வைத்த சுவரெல்லாம் – மெத்தைவீடு*
*அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்*
*தாரங்களும் பிள்ளைகளுடன் – கூட்டிக்கொண்டு*
*தானடந்து வேகமுடன் கூகூவென்றார்*

*வாகுடனே தொண்டைமான்சீமை – தன்னிலே*
*வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே*
*சேகரமாய் வைத்தமரங்கள் – அத்தனையும்*
*சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே*

*சம்பிரமுடன் கப்பல்களெல்லாம் – கடலிலே*
*தானடந்து வேகமுடன் வரும்போதிலே*
*கொம்புசுத்திக் கோணக்காத்து – காலனைப்போல்*
*கோணமழை வந்துகப்பல் தான்கவிழ்ந்ததே*

*ஆர்க்காடு மைசூர்வரைக்கும் – கோணக்காத்து*
*அலறி அலறிமெத்த அடித்ததனால்*
*மார்க்கமான சாலையில்போன சனங்களெல்லாம்*
*மயங்கி மயங்கிமெத்தத் தவித்தார்களே*

*தெத்துக்காடு காளப்பநாயக்கன் – பட்டியிலே*
*செத்திறந்த ஆடுமாடு மெத்தவுண்டாம்*
*சித்தர்கள் பொருந்திவாழும் – கொல்லிமலை*
*சேர்ந்திருந்த நாடெல்லாம் காத்தடிச்சுதே*

*இப்படிக்கிச் சேதங்களானால் – குமரேசா*
*எப்படிப் பிழைத்துநாங்கள் ஒப்பிதமாவோம்*
*மெய்ப்புடன்வே லாயுதங்கொண்டு – வருகின்ற*
*விக்கினமெல் லாம்தீர்த்துக் காத்திடீரையா*

*– வெங்கம்பூர் சாமிநாதன்*


**சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| முகில் | – மேகம் | வின்னம் | – சேதம் |
| கெடிகலங்கி | – மிக வருந்தி | வாகு | – சரியாக |
| சம்பிரமுடன் | – முறையாக | காலன் | – எமன் |
| சேகரம் | – கூட்டம் | மெத்த | – மிகவும் |

காங்கேய நாடு – கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று



8th Std Tamil _23-03-2019.indd 27 08-04-2019 3.26.22 PM



**பாடலின் பொருள்**

*திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின. அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.*

*அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன. ஆடவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் 'கூகூ' என்று அலறியபடி ஓடினர். தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன. கடலில் விரைந்து வந்த கப்பல் எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.*

*ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர். தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடு மாடுகள் இறந்தன. சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.*

*முருகப் பெருமானே! இத்தகைய அழிவுகளை நாங்கள் எவ்வாறு தாங்குவோம்? எங்களுக்கு வருகின்ற இடர்களை எல்லாம் தடுத்து எங்களைக் காப்பாயாக!*



**நூல் வெளி**

நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர். பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்று அழைக்கப்பட்டன. புலவர் செ. இராசு தொகுத்த பஞ்சக்கும்மிகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வெங்கம்பூர் சாமிநாதன் இயற்றிய காத்து நொண்டிச் சிந்திலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.



8th Std Tamil _23-03-2019.indd 28 08-04-2019 3.26.22 PM

## கற்பவை கற்றபின்

1. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.
2. இயற்கைச் சீற்றங்கள் பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் கரு _____ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
   அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் _____யும் ஓட்டிவிடும்.
   அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
3. 'விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
   இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே
4. 'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த
   இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த
5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம்
   இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

குறுவினா

1. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
2. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

சிறுவினா

1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
2. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

சிந்தனை வினா

இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?




8th Std Tamil _23-03-2019.indd 29 08-04-2019 3.26.23 PM

இயல் இரண்டு

# நிலம் பொது

7BDRNS




அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் சுகுவாமிஷ் பழங்குடியினர். அவர்களின் தலைவராக விளங்கியவர் சியாட்டல். அவர் அப்பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் சிதையாமல் காக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கக் குடியரசுத்தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அக்கடிதத்தைப் படித்தறிவோம்.

மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானத்தை எப்படி வாங்கவோ விற்கவோ முடியும்? இவ்வாறு செய்ய வேண்டுமென்ற எண்ணமே வேடிக்கையாகத் தோன்றுகிறது. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. அப்படியிருக்கையில் நீங்கள் அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். கூடவே, மின்னும் ஒளியுடைய ஒவ்வொரு ஊசியிலையும் எல்லாக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பித் திரியும் பூச்சி வகைகளும் எம்மக்களின் நினைவிலும் வாழ்விலும் மிகவும் புனிதமானவை. பாலூறும் மரத்திலிருந்து ஒழுகும் திரவம்கூட, செவ்விந்தியர்களின் நினைவுகளைச் சுமந்து நிற்கின்றது.

எமது மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும். நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.


சியாட்டல்

வாஷிங்டனின் பெருந்தலைவர் எங்கள் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்துச் சொல்லி அனுப்பியபோது நாங்கள் மனநிறைவுடன் வாழ எங்களுக்கென்று தனியிடம் ஒதுக்கித் தருவதாகவும் கூறியிருக்கிறார். எனவே அவர் எங்களுக்குத் தந்தையாகவும் நாங்கள் அவருக்குப் பிள்ளைகளாகவும் ஆகிறோம். எனினும், இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இதற்குச் சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும். இந்நிலையில் எங்களுடைய நிலத்தை வாங்கும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்போம்.

ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களேயாகும். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர்; குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும். இந்நிலம் புனிதமானது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் இதனைக் கற்றுக்கொடுங்கள்.

எமது வாழ்வுமுறையின் சிறப்புகள் உங்களுக்குத் தெரியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியும் அதற்கடுத்துள்ள நிலப்பகுதியும் உங்களுக்கு ஒன்றுதான். நீங்கள் அயலவர்கள். இந்நிலத்திலிருந்து தேவையானவற்றை எடுத்துச் செல்லவே நீங்கள் இங்கு வருகின்றீர்கள்.

இப்பூமியானது உங்களின் உடன்பிறந்தார் அன்று; பகைவரே. இதனை வென்று கையகப்படுத்தியபின் நீங்கள் வேறு இடத்திற்கு நகர்ந்துவிடுவீர்கள். நீங்கள் உங்கள் தந்தையர்களின் இடுகாடுகளைக்கூட மறந்துவிட்டு வெகுதூரம் சென்றுவிடுவீர்கள். பிறப்புரிமைக்குரிய சொந்த மண்ணையுங்கூட நீங்கள் மறந்துவிடுவீர்கள். நிலத்தை வாங்குவதும் விற்பதும் உங்களுக்கு ஆடுகள் அல்லது மணிகள் விற்பது போன்றவை. உங்களுடைய கோரப் பசியானது இப்பூமியைக் கொன்றழித்துப் பாழாக்கி அதனைப் பாலைவனம் ஆக்கிவிடும். ஆனால் நாங்கள் பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள்.

எங்களுடைய வாழ்வுமுறை உங்களுடைய முறையிலிருந்து எந்த அளவு மாறுபட்டது என்பது எமக்குத் துல்லியமாகத் தெரியாது. உங்களுடைய நகரங்களின் காட்சிகளெல்லாம் எமது செவ்விந்தியர்களின் கண்களை உறுத்துகின்றன.

உங்கள் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை. நீங்கள் வாழும் எந்த ஓர் இடத்திலும் அசைந்தாடும் இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை. மாறாக, சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன. மகிழ்வூட்டும் இராக்கூவற் பறவைகளின் ஒலிகளையோ, குளத்தைச் சுற்றிக் கேட்கும் தவளைகளின் கூச்சல்களையோ கேட்காத வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு செவ்விந்தியன் என்பதால் இதனை எவ்வாறு புரிந்துகொள்வதெனத் தெரியவில்லை.

எம்மக்கள் யாவரும் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும் நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும் தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.

நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது. பொதுவான ஒரு காற்றையே இவை யாவும் சுவாசிக்கின்றன. நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இந்தக் காற்றானது அனைத்து உயிர்களையும் காக்கிறது. இவ்வுணர்வுகளைச் சுமந்து நிற்கும் காற்றின் இன்றியமையாமையை, நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் நீங்கள் மறக்கவே கூடாது.

எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும். இந்நிலமே எங்கள் தாயாகும்; எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள். அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள்.

இப்பூமியின் மீது எது வந்து விழுந்தாலும் அவையெல்லாம் பூமித்தாயின் மீது வந்து விழுவனவேயாகும். மேலும், இப்பூமியின் மீது மக்கள் துப்பக்கூடுமானால் அஃது அவர்கள் தம் தாய் மீது துப்புவதற்கு ஒப்பானதாகும்.

இந்நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே இதற்குக் கெடுதல் செய்வதென்பது அதனைப் படைத்த கடவுளை அவமதிக்கும் செயலாகிவிடும். நீங்கள் மற்றப் பழங்குடியினரைக் காட்டிலும் முன்கூட்டியே இந்நிலத்தை விட்டுச் செல்லக்கூடும். நீங்கள் படுத்துறங்கிய இடத்தை நீங்களே அசுத்தப்படுத்தினால் ஒருநாள் இரவு நீங்கள் உங்கள் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி இறந்துபோகக்கூடும்.

இப்பகுதியில் உள்ள எருமைகள் கொல்லப்படுவதையும் எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும் தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இங்கிருந்த புதர்க்காடுகள் எங்கே சென்றன? மழைக் கழுகுகள் எங்கே சென்றன? விரைவாக ஓடக்கூடிய மட்டக் குதிரைகளையும் வேட்டையாடி அழித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படித்தான் வாழவேண்டும் என்ற வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது.

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள். நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள். முழுமையான விருப்பத்தோடு உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். நிலத்தை நேசியுங்கள்; இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல.

தங்கள் உண்மையுள்ள,

சியாட்டல்.

**நூல் வெளி**

இக்கட்டுரை பக்தவத்சல பாரதி எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்துத்தரப்பட்டுள்ளது.



8th Std Tamil _23-03-2019.indd 32 08-04-2019 3.26.23 PM

## கற்பவை கற்றபின்

1. நில வளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளைத் தொகுத்து எழுதுக.
2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _____ மதிக்கின்றனர்.

   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

2. 'இன்னோசை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை

   இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை

3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) பால்ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்

**தொடரில் அமைத்து எழுதுக.**

1. வேடிக்கை – ____________________________________________
2. உடன்பிறந்தார் – ____________________________________________

**குறுவினா**

1. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
2. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
3. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

**சிறுவினா**

1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

**நெடுவினா**

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**சிந்தனை வினா**

நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?



8th Std Tamil _23-03-2019.indd 33 08-04-2019 3.26.23 PM

விரிவானம்

இயல் இரண்டு

# வெட்டுக்கிளியும் சருகுமானும்

W4LG3J

நுழையும்முன்

தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமது முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது என்று எண்ணினர். எனவே காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்றைப் படிப்போம்.



நடுக்காட்டில் சலசலவென ஓடும் ஓடையையுடைய பள்ளத்தாக்கில் பெரிய மரம் ஒன்று விழுந்து கிடந்தது. அதன்மீது மெத்துமெத்தென்று பச்சைப்பாசி படர்ந்திருந்தது. பூச்சி புழுக்கள், நத்தைகள் ஆகியன அந்த மரத்தை எப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கும். காட்டிலுள்ள அனைத்து விலங்குகளுமே நீர் அருந்த அந்த ஓடைக்கு வரும். தாகம் தணிந்தபின் சிறு விலங்குகள் பக்கத்திலுள்ள அடர்ந்த குறிஞ்சிப் புதரில் ஓய்வெடுத்துக் கொள்ளும்.

குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பளிச்சென்று பூத்திருந்த நீலப் பூவின் இதழ்களுக்கிடையே பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்துவந்தது. அது ஒரு வாயாடி வெட்டுக்கிளி. எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதால் அடிக்கடி சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும்.

ஒரு மாலை நேரம் கூரன் என்ற சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. சருகுமான் ஓடையைத் தாண்டுவதும் குதிப்பதுமாக இருந்தது. சருகுமான் சிறிய பிராணி; ஒரு பெரிய, வீட்டுப்பூனை அளவு இருக்கும்; போதாததற்குக் கூச்சப்படும் விலங்கு வேறு. எனவே அதைப் பார்த்து வெட்டுக்கிளி பயப்படவில்லை. கூரன், குறிஞ்சிப் புதர் அருகில் இளைப்பாற வந்தது. இதுதான் சாக்கு என்று வெட்டுக்கிளி அதனிடம் பேசத் துவங்கியது.

"என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்கும் வேகமாக ஓடுகிறாய்?"

"காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது. நான் எங்காவது ஒளிய



8th Std Tamil _23-03-2019.indd 34 08-04-2019 3.26.23 PM

வேண்டும். எனக்குச் சோர்வாக வேறு இருக்கிறது. பல மணி நேரமாக ஓடிஓடிக் களைத்துப் போய்விட்டேன்."

வெட்டுக்கிளி கொஞ்சநேரம் அமைதியாக இருந்தது. அதற்கும் பித்தக்கண்ணுவைத் தெரியும். பெரிய, மஞ்சள் கண்களையுடைய சிறுத்தைதான் அது; மிகச் சிறந்த வேட்டை விலங்கு. விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்துகொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. 'வெட்டுக்கிளியே! நீ வளவளவென்று பேசக்கூடிய ஆள். பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே. அது என்னைப் பார்த்துவிட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும்."

வெட்டுக்கிளி தலையை ஆட்டி உறுதிமொழி அளித்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டது. அதற்குள் கூரனைத் தேடிக்கொண்டு பித்தக்கண்ணு ஓடைப்பக்கம் வந்து சேர்ந்தது. சத்தமில்லாமல், அடிமேல் அடி வைத்து ஓடையில் ஆங்காங்கு இருந்த பாறைகளின் மீது ஏறி மோப்பம் பிடித்துக்கொண்டே நடந்தது. குறிஞ்சிப் புதரின் தாழக் கிடந்த கிளையின்மீது உட்கார்ந்திருந்த வெட்டுக்கிளி அதன் கண்ணில்பட்டதும் அதைப் பார்த்து உறுமியது.

"கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?"

வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதான் முதல்முறை. அது கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வாயைத் திறந்த பொழுது, கூரனுக்கு அளித்திருந்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. எனவே உடனே வாயை மூடிக்கொண்டது. ஆனால் பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.

அறிவாளியான பித்தக்கண்ணுவுக்கு வெட்டுக்கிளியின் குதியாட்டத்திற்கான பொருள் புரியாமலா போகும்? உடனே அது கூரன் பதுங்கிக் கிடந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. நல்ல வேளையாக முதல் நாள் இரவுதான் அந்த மரத்தடியில் புனுகுப்பூனை ஒன்று தங்கியிருந்தது. அது தங்கிய இடம்தான் அப்படி நாறுமே. எனவே, பித்தக்கண்ணு என்னதான் மோப்பம் பிடித்தாலும், கூரனின் உடல்வாடை அதன் மூக்குக்கு எட்டவில்லை. மாறாக, புனுகுப்பூனையின் துர்நாற்றமே எட்டியது.

கொஞ்ச நேரம் பித்தக்கண்ணு அந்த இடத்தையே சுற்றிச் சுற்றி வந்து மோப்பம் பிடித்துப் பார்த்தது. ஆனால் எதுவும் தட்டுப்படாததால் உறுமிக்கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது.

ஒளிந்திருந்த இடத்திலிருந்து கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக

**தெரிந்து தெளிவோம்**

பரம்பிக்குளம், ஆனைமலைப் பகுதிகளில் காடர்கள் வசிக்கும் சிற்றூர்கள் பல உள்ளன. காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினர். தாங்கள் பேசும் மொழியை 'ஆல்அலப்பு' என்று அழைக்கின்றனர். அவர்களின் வாழ்க்கைமுறை பற்றிய எழுத்துக் குறிப்புகள் ஏதும் அவர்களிடம் இல்லை.



8th Std Tamil _23-03-2019.indd 35 08-04-2019 3.26.23 PM



வெட்டுக்கிளிமீது அதற்குக் கோபமான கோபம். அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. இனி எந்தச் சூழ்நிலையிலும் அது வாக்குறுதியை மீறக்கூடாது என்பதற்காக வெட்டுக்கிளியை மிரட்டிவிட்டுப் போனால் என்ன என்று தோன்றியது.

"முட்டாள்! பித்தக்கண்ணு முன் அப்படிக் குதியாட்டம் போடாவிட்டால் என்ன? நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். அது என்னைத் தன் பெரிய வாய்க்குள் திணித்துத் திங்காமல் விட்டது அதிசயம்தான்" என்று கத்தியது. "இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்."

இப்படிச் சொல்லிக்கொண்டே தனது சிறிய, கூர்மையான பாதங்களை மண்ணின்மீது அழுத்தி எகிறிக் குதித்தது. அதனுடைய இந்தச் செயலால் குறிஞ்சிப்புதர் அப்படியும் இப்படியும் ஆடியது. அந்த வேகத்தில் தாழக் கிடந்த கிளையில் இருந்த வெட்டுக்கிளி கீழே விழப்போனது. அதன் மீது கோபப் பார்வையை வீசிவிட்டுக் கூரன் காட்டுக்குள் ஓடியது.

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால்தான் இன்றும்கூட வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்கமுடியாமல் குதித்த வண்ணமுள்ளன. ஆனாலும் அவை எந்தக் குறிப்பிட்ட திசையை நோக்கியும் குதிப்பதில்லை.

**நூல் வெளி**

மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர். அவற்றை யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ. கீதா தமிழாக்கம் செய்துள்ளார். அந்நூலில் இருந்து ஒரு கதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

## மதிப்பீடு

'வெட்டுக்கிளியும் சருகுமானும்' , கதையைச் சுருக்கி எழுதுக.

கற்கண்டு

இயல் இரண்டு

# வினைமுற்று

PBI7PL

படித்தான், ஆடுகின்றாள், பறந்தது, சென்ற, கண்டு ஆகியவை செயலை அடிப்படையாகக் கொண்ட சொற்கள் ஆகும். செயலை வினை என்றும் குறிப்பர். இவ்வாறு ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

## வினைமுற்று

மலர்விழி எழுதினாள். கண்ணன் பாடுகிறான். மாடு மேயும்.

இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.

வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

## தெரிநிலை வினைமுற்று

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) எழுதினாள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்பவர் | - | மாணவி | காலம் | - | இறந்தகாலம் |
| கருவி | - | தாளும் எழுதுகோலும் | செய்பொருள் | - | கட்டுரை |
| நிலம் | - | பள்ளி | செயல் | - | எழுதுதல் |

## குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருள் | - | பொன்னன் | சினை | - | கண்ணன் |
| இடம் | - | தென்னாட்டார் | பண்பு (குணம்) | - | கரியன் |
| காலம் | - | ஆதிரையான் | தொழில் | - | எழுத்தன் |

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகள் அன்றி ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.



8th Std Tamil _23-03-2019.indd 37 08-04-2019 3.26.24 PM

### ஏவல் வினைமுற்று

பாடம் படி. கடைக்குப் போ.

இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

(எ.கா.) எழுது – ஒருமை எழுதுமின் – பன்மை

பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

### வியங்கோள் வினைமுற்று

வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

(எ.கா.) வாழ்க, ஒழிக, வாழியர்.

**ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும். |

### தெரிந்து தெளிவோம்

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
2. இயர், அல், ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.

## கற்பவை கற்றபின்

'வாழ்க' என்னும் சொல்லை ஐந்து பால்களிலும், மூன்று இடங்களிலும் இடம் பெறுமாறு தொடர்களை எழுதுக.

(எ.கா.) அவன் வாழ்க. (ஆண்பால்) நாம் வாழ்க. (தன்மை)



8th Std Tamil _23-03-2019.indd 38 08-04-2019 3.26.25 PM

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று _____.

   அ) மாடு   ஆ) வயல்   இ) புல்   ஈ) மேய்ந்தது

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று _____.

   அ) படித்தான்   ஆ) நடக்கிறான்   இ) உண்பான்   ஈ) ஓடாது

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் _____.

   அ) செல்க   ஆ) ஓடு   இ) வாழ்க   ஈ) வாழிய

**சிறுவினா**

1. வினைமுற்று என்றால் என்ன?
2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

**மொழியை ஆள்வோம்!**

AQ2TW3

**கேட்க.**

இயற்கை என்னும் தலைப்பில் அமைந்த புதுக்கவிதைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

இயற்கையைப் பாதுகாப்போம்.

**சொல்லக்கேட்டு எழுதுக.**

இயற்கையை விரும்புவது மட்டுமன்றி, அதைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது. அது நமது கடமை மட்டுமன்று; பொறுப்பும் ஆகும். நாம் விரும்பிக் கண்டு களித்த இயற்கைச் செல்வங்களை, வரும் தலைமுறையினருக்காகச் சேர்த்தும் பாதுகாத்தும் வைக்க வேண்டும். இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து விழிப்புணர்வு உண்டாக்க ஒவ்வோர் ஆண்டும் சூலை 28 ஆம் நாள் உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.



8th Std Tamil _23-03-2019.indd 39    08-04-2019 3.26.25 PM

## தமிழ் எண்கள் அறிவோம்.

### விடுபட்ட கட்டங்களை நிரப்புக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| கக | கஉ | | | | | | | | |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| | | | | உரு | | | | | |

### வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

1. உலக ஈர நில நாள் பிப்ரவரி **2**. _____
2. உலக ஓசோன் நாள் செப்டம்பர் **16**. _____
3. உலக இயற்கை நாள் அக்டோபர் **3**. _____
4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் **6**. _____
5. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு தினம் அக்டோபர் **5**. _____

## அறிந்து பயன்படுத்துவோம்.

### தொடர் வகைகள்

தொடர்கள் பொருள் அடிப்படையில் நான்கு வகைப்படும்.

#### செய்தித் தொடர்

ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் செய்தித் தொடர் ஆகும்.

(எ.கா.) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

#### வினாத்தொடர்

ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் தொடர் வினாத்தொடர் ஆகும்

(எ.கா.) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

#### விழைவுத் தொடர்

ஏவல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும் தொடர் விழைவுத் தொடர் ஆகும்.

(எ.கா.) இளமையில் கல். (ஏவல்)

உன் திருக்குறள் நூலைத் தருக. (வேண்டுதல்)

உழவுத்தொழில் வாழ்க. (வாழ்த்துதல்)

கல்லாமை ஒழிக. (வைதல்)



8th Std Tamil _23-03-2019.indd 40 08-04-2019 3.26.25 PM

### உணர்ச்சித் தொடர்

உவகை, அழுகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் தொடர் உணர்ச்சித் தொடர் எனப்படும்.

(எ.கா.) அடடா! என் தங்கை பரிசு பெற்றாள்! (உவகை)

ஆ! புலி வருகிறது! (அச்சம்)

பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே! (அவலம்)

ஆ! மலையின் உயரம்தான் என்னே! (வியப்பு)

### கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ___________________
2. கடமையைச் செய். ___________________
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! ___________________
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? ___________________

### தொடர்களை மாற்றுக.

(எ.கா.) நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத்தொடராக மாற்றுக.)

நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

1. காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)

   ___________________________________________________

2. ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித்தொடராக மாற்றுக.)

   ___________________________________________________

3. அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக.)

   ___________________________________________________

4. முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? (செய்தித்தொடராக மாற்றுக.)

   ___________________________________________________

5. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக.)

   ___________________________________________________

### கடிதம் எழுதுக.

விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.



8th Std Tamil _23-03-2019.indd 41 08-04-2019 3.26.25 PM

## மொழியோடு விளையாடு

**உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக.**

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| ஆண்பால் | நடக்கிறான் | | |
| பெண்பால் | | | |
| பலர் பால் | | | |
| ஒன்றன் பால் | | | உறங்கியது |
| பலவின் பால் | | | |
| தன்மை | | உண்கிறேன் | |
| முன்னிலை | | | |
| படர்க்கை | | | |
| இறந்த காலம் | | | |
| நிகழ் காலம் | | | |
| எதிர் காலம் | நடப்பான் | | |

**வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.**

1. நடக்கிறது - நட
2. போனான் - _________
3. சென்றனர் - _________
4. உறங்கினாள் - _________
5. வாழிய - _________
6. பேசினாள் - _________
7. வருக - _________
8. தருகின்றனர் - _________
9. பயின்றாள் - _________
10. கேட்டார் - _________

## நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள்...**

1. நீர்நிலைகளைத் தூய்மையாக வைக்க உதவுவேன்.
2. மரம் நட வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

1. பழங்குடியினர் - *Tribes*
2. சமவெளி - *Plain*
3. பள்ளத்தாக்கு - *Valley*
4. புதர் - *Thicket*
5. மலைமுகடு - *Ridge*
6. வெட்டுக்கிளி - *Locust*
7. சிறுத்தை - *Leopard*
8. மொட்டு - *Bud*

## இணையத்தில் காண்க

பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளை இணையத்தில் கண்டு அறிக.




8th Std Tamil _23-03-2019.indd 42 08-04-2019 3.26.25 PM

வாழ்வியல்

இயல் இரண்டு

# திருக்குறள்

E4QW4D




திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூல்; எக்காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துகளைக் கொண்ட நூல். திருக்குறளின் பெருமையை விளக்க, 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுதப்பட்டிருப்பதே அதன் பெருமைக்குச் சான்றாகும். இத்தகைய பெருமை கொண்ட திருக்குறளைப் பயில்வோம்.

## நடுவுநிலைமை

1. *தக்கார் தகவிலர் என்பது அவரவர்*
*எச்சத்தால் காணப் படும்**.*

பொருள் :நடுவு நிலைமை உடையவர், நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படும்.

2. *சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி.*

பொருள் :தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

அணி :உவமை அணி.

## கூடா ஒழுக்கம்

3. *வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.*

பொருள் :மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

அணி :இல்பொருள் உவமை அணி.

4. *கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன*
*வினைபடு பாலால் கொளல்**.*

பொருள் :நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது. அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.



8th Std Tamil _23-03-2019.indd 43 08-04-2019 3.26.25 PM

## கல்லாமை

5. *உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
*களர்அனையர் கல்லா தவர்.*

பொருள்: கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

6. *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்*.*

பொருள்: கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

## குற்றங்கடிதல்

7. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.*

பொருள்: பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக்கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும்.

அணி : உவமை அணி.

8. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்றம் ஆகும் இறைக்கு*.*

பொருள்: தலைவன் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

## இடனறிதல்

9. *தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
*இடங்கண்ட பின்அல் லது.*

பொருள்: பொருத்தமான இடத்தை அறியாமல் எந்தச் செயலையும், தொடங்கவும் கூடாது; இகழவும் கூடாது.

10. *கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்*
*நாவாயும் ஓடா நிலத்து.*

பொருள்: வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும்.


அணி : பிறிது மொழிதல் அணி.



8th Std Tamil _23-03-2019.indd 44 08-04-2019 3.26.26 PM



**நூல் வெளி**



பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல் , ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது _____.

   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை

   இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் _____.

   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்

   இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

3. 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்

   இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்

4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்

5. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி _____.

   அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி

   இ) உவமை அணி ஈ) உருவக அணி

**குறுவினா**

1. சான்றோர்க்கு அழகாவது எது?
2. பழியின்றி வாழும் வழியாக, திருக்குறள் கூறுவது யாது?
3. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?



8th Std Tamil _23-03-2019.indd 45 08-04-2019 3.26.26 PM

திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.

1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.

2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் ______

புலியின்தோல் ______மேய்ந் தற்று.

2. விலங்கொடு _____ அனையர் ______

கற்றாரோடு ஏனை யவர்.

சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது


வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக.



1. __________ __________ __________ __________

__________ __________ __________



2. __________ __________ __________ __________

__________ __________ __________



8th Std Tamil _23-03-2019.indd 46 08-04-2019 3.26.26 PM